இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 291 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 18 – ஞாயிற்றுக்கிழமை 01 ஜுன் 2025 – மதுரை 52 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 291 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 18 - Sunday 01 June 2025 - Madurai 52 Pages ₹ 5.00

## முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# மதுரையில் இன்று கழகப் பொதுக் குழு!

## இந்திய அரசியல் – தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன!

**மதுரை, ஜுன் 1-**

**முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (1.6.2025) கழகப் பொதுக் குழு கூடுகிறது. இப்பொதுக் குழுவில் இந்திய அரசியலை, தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.**

இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஆண்டுக்கு ஒருமுறை பொதுக்குழு கூட்டத்தையும், 2 முறை செயற்குழு கூட்டத்தையும் நடத்த வேண்டும் என்பது விதிமுறை ஆகும். அந்த வகையில், தி.மு.க.வின் பொதுக்குழு கூட்டம் மதுரை உத்தங்குடியில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் தொடங்கி நடைபெற உள்ளது.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் – இன்று தி.மு.க. பொதுக் குழு கூடுவது குறித்து கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்திருந்த அறிவிப்பு வருமாறு:-



**தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (1-6-2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம், மதுரை, உத்தங்குடி, “கலைஞர் திடலில்” நடைபெறும்.**

**அதுபோது பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**பொருள் : 1. கழக ஆக்கப்பணிகள்**
**2. தணிக்கைக்குழு அறிக்கை**

**குறிப்பு : தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் அந்தந்த மாவட்டத்திற்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் - மாநில நிர்வாகிகள் - அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் கூட்டம் நடைபெறும் அரங்கத்திற்கு வெளியே தங்கள் மாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள ‘மினிட்’ புத்தகத்தில் கையொப்பமிட்டு, தங்களுக்குண்டான ‘பேட்ஜ்’-ஐ பெற்றுக் கொண்டு, காலை 9.00 மணிக்குள் பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத்திற்குள் மாவட்ட வாரியாக அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

இவ்வாறு அவர் அந்த அறிவிப்பில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பொதுக் குழுக் கூட்டத்திற்காக மதுரை மேலூர் நெடுஞ்சாலையில் 20 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்ட அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுக் குழு கூட்ட அரங்கிற்கு ‘கலைஞர் திடல்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேடையில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.மூர்த்தி உள்ளிட்ட 11 பேர் அமரும் வகையில் இருக்கை வசதி செய்யப்பட்டுள்ளது.

**100 அடி உயர கொடிக்கம்பம்!**

100 அடி உயர தி.மு.க. கொடி கம்பம் நடப்பட்டுள்ளது. இதில் தி.மு.க. கொடியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்து பொதுக் குழுக் கூட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

**அண்ணா அறிவாலயம் போன்ற அரங்கின் முகப்பு!**

பொதுக்குழு கூட்டத்தின் முகப்பு அரங்கம் சென்னை அண்ணா அறிவாலயம் போன்று அமைக்கப்பட்டு கலைஞர் அவர்களின் வெண்கல சிலை நிறுவப்பட்டுள்ளது. அண்ணா அறிவாலயத்தில் இருப்பது போன்று புல் வெளிகளும், பூத்துக் குலுங்கும் மலர் செடிகளும் நுழைவாயில் பாதையை அலங்கரித்துள்ளன. கூட்ட அரங்கு முழுவதும் குளு, குளு ஏ.சி. வசதி செய்யப்பட்டுள்ளது.

**60 கி.மீ. தூரத்திற்கு கழகக் கொடிக் கம்பங்கள்!**

60 கி.மீ. தொலைவுக்கு 10 அடி இடைவெளியில் ஒரு தி.மு.க. கொடி கம்பம் நடப்பட்டுள்ளது. இந்த பிரமாண்ட ஏற்பாடுகளால் மதுரை உத்தங்குடி விழாக் கோலம் பூண்டுள்ளது.

**பம்பரம்போல் சுழன்று பணியாற்றும் அமைச்சர் பி.மூர்த்தி!**

தி.மு.க. பொதுக்குழு கூட் டத்தில் பங்கேற்குமாறு 3 ஆயிரத்து 400 பொதுக்குழு உறுப்பினர்களுக்கு கட்சி தலைமையில் இருந்து தனித்தனி அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், மாவட்டச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள், தி.மு.க.வில் அமைப்பு ரீதியாகச் செயல்படும் 23 அணியின் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் என 4 ஆயிரம் பேர் சிறப்பு அழைப்பாளர்களாக பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

இதற்கான பிரமாண்ட ஏற்பாடுகளை மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான பி.மூர்த்தி பம்பரம்போல் சுழன்று சிறப்பாகச் செய்துள்ளார்.

---

## மாமதுரையில் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் 22 கி.மீ. மகத்தான “ரோடு ஷோ”!

## சாலைகளின் இரு மருங்கிலும் மக்கள் வெள்ளம்! உற்சாகமாய் அலைகடலெனத் திரண்டனர்!

**மதுரை, ஜுன் 1 -**

**மதுரையில் நேற்று மாலை முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற 22 கி.மீ. பிரமாண்ட “ரோடு ஷோ” நடைபெற்றது. இதில் லட்சக் கணக்கான மக்கள் திரண்டு வழியெங்கும் உற்சாக வரவேற்பளித்தனர்.**

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுக்குழு கூட்டத்திற்கு வரும் முன்பாக நேற்று (31 ஆம் தேதி) மாலை அவனியாபுரத்தில் புறப்பட்டு வில்லாபுரம் ஜெயவிலாஸ் பணிமனை வழியாக ஜெய்ஹிந்த்புரம், சோலை அழகுபுரம், ஜீவா நகர், பழங்காநத்தம் வழியாக மதுரை காளவாசல், பெத்தானியாபுரம் பகுதி வழியாக ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் அமைந்துள்ள திருமலை நாயக்கர் சிலை வரை சென்று பின் அங்கிருந்து மதுரை புதுஜெயில் ரோட்டில் அமைந்துள்ள மதுரா கோட்ஸ் முன்பாக அமைந்துள்ள மதுரை மாநகராட்சியின் முதல் மேயர் எஸ்.முத்து அவர்களின் திருவுருவ வெண்கல சிலையை திறந்து வைத்து பெருமை சேர்த்தார்.

**முன்னாள் மேயர் முத்து சிலை திறப்பு!**

வில்லாபுரத்திலிருந்து முன்னாள் மேயர் முத்து சிலை திறப்பு விழா மேடை வரை சுமார் 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக பிரம்மாண்டமான ‘ரோடு ஷோ’ நடைபெற்றது.

மேலும் செல்லும் வழியெல்லாம் மின்விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

**இரவு பகலாக பாடுபடும் அமைச்சர் பி.மூர்த்தி!**

‘ரோடு ஷோ’வில் சாலையின் இரு புறங்களிலும் சுமார் 2 லட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள், கழகத்தினர் இரு வண்ணக் கொடிகளை கையில் ஏந்தியும், திராவிட அரசின் சாதனைகளை விளக்கும் வகையில், முதல்வர் மற்றும் துணை முதல்வர் உருவம் கொண்ட பதாகைகளையும் கையில் ஏந்தி மாபெரும் உற்சாகத்துடன் வரவேற்பு அளித்தனர். இது போன்று எழுச்சிமிகு வரவேற்பு எங்கும் நடந்ததில்லை என எல்லோரும் பாராட்டும் வகையில் அதற்கான ஏற்பாடுகளை மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் செய்திருந்தனர்.

இன்று (1.6.2025ஆம் தேதி) கழகப் பொதுக் குழுக் கூட்டம் உத்தங்குடி கலைஞர் திடலில் பிரமாண்டமாக நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பங்கேற்று முக்கிய உரையாற்ற கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதூரில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு தங்கும் விடுதியில் இருந்து பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும் உத்தங்குடி கலைஞர் திடல் வரை சாலையின் இரு புறமும் பொதுமக்கள் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு இரு வண்ணக் கொடிகள், வரவேற்பு பதாகைகளை கையில் ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்க உள்ளனர்.

தலைவர் அவர்கள் வரும் வழியெங்கும் கிராமிய கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சுமார் 60 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு எங்கு பார்த்தாலும் கழகத்தின் இரு வண்ணக் கொடிகள் பறக்க விடப்பட்டு மதுரையே விழாக்கோலம் பூண்டுள்ளது.